# இயேசு ஊழியங்கள்



**105/229, எம்.டி.எச் சாலை, வில்லிவாக்கம், சென்னை – 600 049**
**போன்: 9003009752**
**ஈமெயில்: beten.vatsar@angeltv.org இணையதளம்: www.jesusministries.org**

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு மகளே...

அதிசீக்கிரமாக வரப்போகும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இன்ப நாமத்தில் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் என் இனிய புத்தாண்டின் நல்வாழ்த்துகள். பழையவைகள் கழிந்தன எல்லாம் புதிதாயின என்ற வார்த்தையின்படி 2018-ஆம் ஆண்டை முடித்து 2019-ஆம் ஆண்டிற்குள்ளாக நுழைந்திருக்கிறோம். இந்த புதிய ஆண்டின் துவக்கத்தில் புதிய ஆசீர்வாதங்களையும் புதிய கிருபைகளையும் அளவில்லாமல் உங்கள் குடும்பங்களை நிரப்பும்படி தேவனாகிய கர்த்தரிடம் நான் பிரார்த்தனைசெய்கிறேன். இந்த 2019-ஆம் ஆண்டில் கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வாக்குதத்தம் “உன்னை தேவ மகிமையின் அதிசயங்களை காணச் செய்வார்.” இந்த வருடம் முழுவதும் நீங்கள் தேவ மகிமையை அனுபவிக்கபோகிறீர்கள். தேவ மகிமை என்றால் என்ன? மரித்துப்போன லாசருவின் சகோதரியைப்பார்த்து ஆண்டவர் சொல்லுகிறார். நீ விசுவாசித்தால் தேவமகிமையை காண்பாய் என்றார் (யோவான் 11:40). அவளும் இயேசு தன் சகோதரனை உயிரோடே எழுப்புவார் என்று விசுவாசித்தாள். அதேபோல செத்து நான்கு நாட்கள் ஆன லாசரு உயிரோடே எழுந்தான். இதுதான் தேவமகிமைக்கு அடையாளம். அப்படிப்பட்ட அற்புதமான காரியங்களை உங்கள் வாழ்கையில் செய்யப்போகிறார்.

நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் சரி, நீங்கள் விசுவாசித்தால் தேவமகிமையைக் காண்பீர்கள். அது எப்படிப்பட்ட மகிமையாக இருக்குமென்றால் இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்துக்கு பிரயாணமாக சென்றுகொண்டிருந்தபோது அவர்களுக்கு முன்பாக தடையாக இருந்த செங்கடல் இரண்டாகப் பிளந்து மேகஸ்தம்பத்தாலும் அக்கினி ஸ்தம்பத்தாலும் வழிநடத்திய கர்த்தருடைய செயலைப் பார்த்த ஜனங்கள் தேவனை மகிமைப்படுத்தி ஆச்சரியத்தால் வியந்துபோனார்கள். அதேபோல இந்த ஆண்டின் வாக்குதத்தத்தின்படி தேவன் மகிமையான அதியங்களை உங்கள் வாழ்க்கையில் செய்யப்போகிறார். அது இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயமாக இருக்கும். உங்கள் கண்கள் ஆச்சரியத்தால் நிறைந்திருக்கும். அவர் செய்கிற அதிசயங்களைப் பார்த்து நீங்கள் வியந்துபோவீர்கள். தேவனை மகிமைப்படுத்திக்கொண்டே இருப்பீர்கள். சென்ற வருடம் நீங்கள் எந்த காரியத்திற்கெல்லாம் பதில் வேண்டும் என்று ஜெபித்துக்கொண்டிருந்தீர்களோ? எந்த காரியத்திற்காக ஏக்கத்தோடு காத்திருந்தீர்களோ? அந்தக் காரியம் இந்த ஆண்டில் நிச்சயமாய் நிறைவேறும். அவரை விசுவாசியுங்கள் தேவ மகிமையைக் காணுங்கள்.

உங்களுக்காக நான் ஜெபிக்கப்போகிறேன். என்னோடு இணைந்து நீங்களும் ஜெபியுங்கள்.

எங்களை அதிகமாக நேசிக்கும் எங்கள் அன்பின் பரலோக பிதாவே நீர் எங்களுக்கு இரக்கம்பாராட்டி கிருபையாய் கொடுத்த புதிய ஆண்டிற்காக உமக்கு நன்றி. இந்த ஆண்டின் வாக்குதத்தின்படி தேவமகிமையின் அதிசயங்களை என் அன்பு மகள் காணும்படி செய்யும். பரிசுத்த பிதாவே, சென்ற வருடம் எந்த காரியத்திற்கெல்லாம் மிகுந்த எதிர்பாாப்போடு கர்த்திருந்தார்களோ, அவைகள் அத்தனையும் இந்த வருடம் நிறைவேறட்டும். இந்த ஆண்டில் அவர்கள் பெற்றெடுக்கப்போகும் குழந்தையை நீர் உம்முடைய மகிமையால் மூடிக்கொள்ளும். நல்ல ஆசீர்வாதமான சுகபிரசவத்தைத் தாரும். அவர்கள் குடும்பத்தார் அனைவரையும் இந்த ஆண்டின் நன்மையால் முடிசூட்டும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் பரிசுத்தமுள்ள நல்லபிதாவே. ஆமென்.

மேலும் ஜெப உதவிக்கு எங்கள் ஜெபவீரர்களை தொடர்புக்கொள்ளுங்கள : 9003009752

அன்புடன்

சாது சுந்தர் செல்வராஜ்

*குறிப்பு : உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.*